# வட மத்திய மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 தரம் 1(அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட் சேர்ப்புச் செய்தல் - 2023 (IIம் கட்டம்)

## பொது நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சை நடாத்துதல்

உரிய விடயத்திற்கு அமைய வடமத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டதன்படி ஒவ்வொரு பாடத்திற்காகவும் நடாத்தப்பட்ட வெற்றிட எண்ணிக்கையினைப் போன்று மூன்று மடங்கான, தகுதியினைப் பெற்ற விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சை புள்ளி திறனிற்கு ஏற்ப இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்றனர். (இணைப்பு 01)

உரிய நேர்முக மற்றும் செய்முறைப் பரீட்சை 2024.04.02 மற்றும் 3 ஆகிய இரு தினங்களில் வட மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் (5ம் மாடி) நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி அன்றைய தினம் கீழ்குறிப்பிடப்படும் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (இங்கு குறிப்பிடப்படாத சான்றிதழ்களினை சமர்ப்பிப்பதனை தவிர்க்கவும்) அச்சான்றிதழ்களின் நிழற்பிரதி தங்களால் உண்மையானதென சான்றுப்படுத்தி அவற்றினை அட்டையிலான ஆவணக் கோவையில் (file) கீழ்க் குறிப்பிடப்படும் வரிசைக்கிரமத்தில் ஒழுங்குபடுத்தி எடுத்துவரல் வேண்டும் என்பதுடன் இந்த ஆவணக் கோவையின் முகப்பில் **உங்களது தொடர் இல** (வலைத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் உமது பெயருக்குரியதான தொடர் இல) **உமது பரீட்சை இல உமது முதல் எழுத்துக்களுடன் பெயர் தேசிய அடையாள அட்டை** இல என்பனவற்றை கோப்பின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். (Name shoud be written in Sinhala and English languages according to NIC)

1. தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் (பெயரில் வேறுபாடு காணப்படுமெனின் சத்தியக் கடதாசி சமர்ப்பித்தல் வேண்டும்)
2. கா.பொ.த(சா.த/உ.த) சான்றிதழ்களின் மூலப்பிரதி
   பரீட்சைத் திணைக்களம் மூலமாக விநியோகிக்கப்படும் பெறுபேற்றுச் சான்றிதழாக காணப்படல் வேண்டும்.
3. பட்டச் சான்றிதழ் / டிப்ளோமா மற்றும் பட்டத்தின் வரச் சான்றிதழ். ஆகியவற்றின் மூலப்பிரதி (degree certificate and detail certificate)
   அரச பல்கலைக் கழகங்கள் தவிர்த்து தனியார் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் அல்லது பட்டங்கள் வழங்கும் நிறுவனங்கள் மூலமாக பெற்றுக் கொண்ட பட்டமெனின் உரிய நிறுவனம் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினில் பதிவு செய்துள்ள சான்றிதழ் / அனுமதியினைப் பெற்றுக் கொண்டுள்ள சான்றிதழினை முன்வைத்தல் வேண்டும்.

4. உங்களது பதிவினை உறுதிப்படுத்தும் வகையில் கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் (DS04) சமர்ப்பித்தல் வேண்டும். அதில் உமது வதிவு எக்காலத்திலிருந்து என்பது குறிப்பிடப்படல் வேண்டும்.

   நீங்கள் விண்ணப்பிப்பது உமது துணைவரின் நிரந்தர வதிவிடத்தின் அடிப்படையில் எனின் துணைவரின் நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தர் சான்றிதழினையும் சமர்ப்பித்தல் வேண்டும் (உமது நிலையான வதிவிடத்தினை வட மத்திய மாகாணத்திற்கு மாற்றியிருப்பின் துணைவரின் நிலையான வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரது சான்றிதழுடன் உமது வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரது சான்றிதழினையும் சமர்ப்பித்தல் வேண்டும்) வதிவு என்றிலிருந்து என்பது குறிப்பிடப்படல் வேண்டும்.
5. அதே போன்று மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து ஆவணங்களும் தகைமையினைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை தினத்திலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் எதுவும் எற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
6. உம்மால் விண்ணப்பிக்கப்பட்டிருக்கும் பாடத்திற்கு உரியதாக கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் வகையில் 05 நிமிடங்கள் செய்முறைச் செயற்பாடு ஒன்றை நிகழ்த்துதல் வேண்டும். உங்களால் மேற்கொள்ளப்படும் செய்முறைக்காக Microsoft power point presentations எச்சந்தர்ப்பத்திலும் நடாத்த முடியாது. என்பதுடன் வகுப்பறையினுள் கற்பிக்கும் முறைமைக்கிணங்க கற்பித்தல் உபகரணங்களைப் பாவித்து செய்முறைப் பரீட்சையினை நடாத்துல் வேண்டும். (medium of the presentations of the Candidates who applied for English language should be in English)
7. நேர்முக மற்றும் செய்முறைப் பரீட்சைக்காக உங்களுக்கு குறித்த நேரத்திற்கு 15 நிமிடத்திற்கு முன்னர் மாகாண சபை கேட்போர் கூடத்திற்கு வருகை தரல் கட்டாயமானதாகும்.
8. நேர்முக மற்றும் செய்முறைப் பரீட்சைக்காக அழைப்பது நியமிப்பு ஒன்றைச் செய்வதற்கான தகுதியாக ஒரு போதும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஜீ.கே.எஸ்.சந்திரலதா,<br>
செயலாளர்,<br>
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு<br>
வட மத்திய மாகாணம்.<br>
2024.03.25

செய்முறைப் பரீட்சை முறைமை

செய்முறைப் பரீட்சைக்காக 05 நிமிடத்திற்கு குறையாத காலம் வழங்கப்படும் என்பதுடன் விதிமுறைகள் பின்வருமாறு அமையும்

| | | |
|---|---|---|
| I. | குறிக்கோள் மற்றும் பிரவேஷம் | வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தினை விளக்குதல் மற்றும் பாடப்பிரவேஷம் செய்யும் திறமையினை மதிப்பிடல் |
| II. | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையுடன் காணப்படல் மற்றும் கற்பித்தலில் சிறப்பாக குரலினை பயன்படுத்தும் தன்மை பற்றி மதிப்பிடல் |
| III. | தொடர்பாடல் தெளிவு | கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் உரிய விடயங்களை உற்பத்தி திறனுள்ள முறையில் தெரிவிக்கும் திறமையினை மதிப்பிடல் |

| | | |
|---|---|---|
| IV. | நேர முகாமைத்துவம் | வழங்கப்படும் நேரத்தினுள் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் திறமையினை மதிப்பிடல் |
| V. | முன்வைத்தல் நுட்ப முறைகளின் பயன்பாடு | நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக முன்வைத்தல் நுட்ப முறைகளை சிறப்பாக பயன்படுத்தும் திறமையினை மதிப்பிடல் |

செய்முறைப் பரீட்சைக்காக பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| தொ.இல | செயன்முறைப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நியமங்கள் | அதிகூடிய புள்ளிகள் | சித்திபெறுவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | குறிக்கோள் மற்றும் பிரவேஷம் | 05 | 02 |
| 02. | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03. | தொடர்பாடல் தெளிவு | 05 | 02 |
| 04. | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05. | முன்வைத்தல் நுட்ப முறைகளின் பயன்பாடு | 05 | 02 |
| மொத்த புள்ளிகள் | | 25 | 10 |